# எளிய முறையில் குபேர பூஜை

**-சாந்திப்பிரியா-**




மேலே காணப்படும் யந்திரத்தை பகவான் குபேர யந்திரம் என்கிறார்கள். இந்த யந்திரத்தை பூஜிப்பதின் மூலம் பகவான் குபேரரின் அருளை பெறலாம். இது பகவான் குபேரன் தனக்கு ஏற்பட்ட சாபத்தினால் அனைத்தையும் இழந்து நின்றபோது மஹாலஷ்மி தேவியை வணங்கி பெற்றதாம். ஆகவே நாமும் அந்த எளிய குபேர பூஜையை செய்ய நமக்கு செல்வம் கிட்டும். செல்வத்தை தற்காலிகமாக அடைய மட்டுமே இந்த பூஜையை செய்ய வேண்டும் என்பது இல்லை. குடும்ப அமைதி, மகிழ்ச்சி மற்றும் பணப் பற்றாக்குறை நீங்க வேண்டும் என்பதற்காக வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை செய்வது நல்லது.

பகவான் குபேரரின் அருளை பெற எளிய பூஜை ஏதாவது உண்டா என்ற கேள்வி எழுகிறதா? ஆமாம் என்பதாகக் கூறி அந்த எளிய பூஜை முறையை எனக்கு ஒரு பண்டிதர் கூறினார். ஆகவே அதை அனைவருக்கும் பலன் அளிக்கும் வகையில் இருக்கட்டும் என வெளியிட்டு உள்ளேன். இந்த பூஜையை செய்ய சமிஸ்கிருத மந்திரங்களை ஓத வேண்டிய அவசியம் இல்லை. ஸ்லோகங்களே

தெரியாதவர்களும் செய்யக் கூடிய மிக எளிய பூஜை இது. இந்த பூஜை முறை மீது மனதார நம்பிக்கை, பூஜை செய்வதில் நேர்மை, பூஜையில் ஆழ்ந்த ஈடுபாடு என்ற மூன்றும் மட்டுமே தேவை.

இந்த பூஜையை துவக்கும் முன் நமக்குத் தேவை ஒரு ஒரே மாதிரியான நாணயங்கள். அவரவர் வசதிக்கு ஏற்ப நாணயங்களை சேர்த்து வைத்துக் கொள்ளலாம். ஐந்து ரூபாய், ஒரு ரூபாய் என்ற மதிப்பு அதிகமான நாணயம் மட்டும் உபயோகிக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. எட்டணாவாக இருந்தாலும் அது நம் உபயோகத்தில் உள்ள நாணையமாக இருக்க வேண்டும். கடைகளில் கிடைக்கும் விளையாட்டு நாணயங்களை பயன்படுத்தக் கூடாது. உபயோகத்தில் இல்லாத நாணயங்களையும் பயன்படுத்தக் கூடாது. அதுவே முக்கியம்.




அடுத்து ஒன்பது நாளைய பூஜையை துவக்கும் முன் முதலில் எந்த நாளில் இருந்து பூஜையை ஆரம்பிக்க உள்ளோம் என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும். அதுவே முக்கியம். இந்த பூஜையை வெள்ளிக் கிழமை அல்லது பௌர்ணமி தினத்தில்தான் துவக்க வேண்டும். பூஜையை வெள்ளிக் கிழமை அல்லது பௌர்ணமி தினத்தில் துவக்கி தொடர்ந்து ஒன்பது வெள்ளிக் கிழமை அல்லது ஒன்பது பௌர்ணமி தினத்தில் பூஜையை செய்து முடிக்க வேண்டும். வெள்ளிக் கிழமை துவக்கினால் வெள்ளிக் கிழமையில்தான் அடுத்த எட்டு நாட்களுக்கான பூஜையையும் செய்ய வேண்டும். அதை போல பௌர்ணமி அன்று துவக்கினால் பௌர்ணமி தினத்தில்தான் அடுத்த எட்டு நாட்களுக்கான பூஜையையும் செய்ய வேண்டும். நாட்களை மாற்றி செய்யக் கூடாது.



பூஜையை துவக்கும் அன்று காலையில் குளித்து விட்டு தெய்வப் படங்களின் முன்னால் அல்லது வாயிலில் விசேஷ நாட்களில் கோலம் போடுவது போல கோலம் போட வேண்டும். அடுத்து குபேர யந்திரக் கோலத்தை நாம் எங்கு அமர்ந்து கொண்டு பூஜை செய்ய உள்ளோமோ அந்த இடத்தில் போட வேண்டும்.

மேலே காணும் யந்திரக் கோலத்தைப் போல அரிசி மாவு, குங்குமம் மற்றும் மஞ்சள் பொடியைக் கொண்டு யந்திரத்தின் உருவம் (கோலம்) போட வேண்டும். கட்டங்கள் குங்குமத்திலும், எண்கள் அரிசி மாவினால் மற்றும் ஸ்ரீ எனும் எழுத்து மஞ்சள் பொடியினால் போட வேண்டும்.

பூஜை செய்பவரால் தவிர்க்க முடியாத காரணத்தினால் பூஜையை தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அவருடைய வீட்டில் குடும்பத்தின் உள்ள யாரேனும் ஒருவர் அதை தொடர்ந்து செய்யலாம். ஆனால் அந்த நபர் அதே வீட்டில் உள்ளவராக, அதே குடும்பத்தினராக இருக்க வேண்டும்.

முதல் நாள் பூஜையில் எந்த நாணயத்தை பயன்படுத்தினீர்களோ, அதே மதிப்பிலான நாணயங்களைத்தான் ஒன்பது நாள் பூஜையிலும் பயன் படுத்த வேண்டும். உதாரணமாக ஒரு ரூபாய் நாணயத்தைக் கொண்டு பூஜை செய்தீர்கள் என்றால், ஒன்பது நாட்களிலும் அதே மதிப்பிலான அதாவது ஒரு ரூபாய் நாணயம் மட்டுமே உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு நாள் பூஜையிலும் ஒவ்வொரு மதிப்பிலான நாணயமோ இல்லை ஒரு ரூபாய் இரண்டு, மீதி ஐந்து ரூபாய் நாணயம் என பயன்படுத்தக் கூடாது. ஆகவே பூஜையை துவக்கும் முன்னரே ஒரே மாதிரியான எண்பத்தி ஒரு நாணயத்தை (அதாவது 9 x 9 =81) சேர்த்து வைத்துக் கொண்டே பூஜையை துவக்க வேண்டும்.




பூஜையை எந்த நாளன்று துவக்கினார்களோ அதே தினத்தன்று ஒன்பது நாள் பூஜையை செய்ய வேண்டும். எண்களின் பக்கத்தில் நாணயத்தை வைக்கும்போது எழுத்துக்கள் அழியாமல் இருக்குமாறு பார்த்துக் கொண்டு அந்த நாணயங்களை கட்டத்துக்குள் வைக்க வேண்டும். மேலே உள்ள மாதிரிப் படத்தைப் பார்க்கவும்.

குபேர யந்திரக் கோலம் போட்டு நாணயங்களையும் அதில் வைத்து முடித்ததும் யந்திரத்தின் முன் ஒரு சிறிய விளக்கு ஏற்றி வைத்து பூஜையை துவக்க வேண்டும். பூஜையில் கூற வேண்டிய மந்திரம் என்ன தெரியுமா? மிகவும் சுலபமாகக் கூற முடியும் சுலோக வடிவிலான பிரார்த்தனை அது.

நீங்கள் எதற்காக பூஜை செய்ய விரும்புகின்றீர்களோ அதற்கேற்ப பிரார்த்தனையை செய்யவும். உதாரணமாக:

- மஹாலக்ஷ்மி தேவியே, இந்த நாணயத்தை பூஜிப்பதின் மூலம் நான் உன்னை வணங்குகின்றேன். என் கடன்கள் தீர்ந்து எனக்கு மன நிம்மதி கிடைக்க நீ அருள் புரிய வேண்டும்.
- அல்லது மஹாலக்ஷ்மி தேவியே, இந்த நாணயத்தை பூஜிப்பதின் மூலம் நான் உன்னை வணங்குகின்றேன். எனக்கு ஏற்பட்டு உள்ள பண இழப்புக்கள் தீரவும், வாங்கிய கடன்கள் அடைபடவும் தேவையான செல்வம் கிடைத்து எனக்கு மன நிம்மதி கிடைக்க நீ அருள் புரிய வேண்டும்.
- அல்லது மஹாலக்ஷ்மி தேவியே, இந்த நாணயத்தை பூஜிப்பதின் மூலம் நான் உன்னை வணங்குகின்றேன். எனக்கு ஏற்படும் வீண் விரயங்களை தடுத்து செல்வம் நிலைக்கவும் எனக்கு மன நிம்மதி கிடைக்கவும் நீ அருள் புரிய வேண்டும்.
- அல்லது மஹாலக்ஷ்மி தேவியே, இந்த நாணயத்தை பூஜிப்பதின் மூலம் நான் உன்னை வணங்குகின்றேன். என் குழந்தைகளை நல்ல முறையில் படிக்க வைக்கத் தேவையான அளவிலான செல்வம் கிடைக்கவும் எனக்கு மன நிம்மதி கிடைக்கவும் நீ அருள் புரிய வேண்டும்.
- அல்லது மஹாலக்ஷ்மி தேவியே, இந்த நாணயத்தை பூஜிப்பதின் மூலம் நான் உன்னை வணங்குகின்றேன். என் குடும்ப வாழ்க்கைக்கு தேவையான செல்வம் கிடைக்கவும் எனக்கு மன நிம்மதி கிடைக்கவும் நீ அருள் புரிய வேண்டும்.

இப்படியாக எந்த பிரச்சனை தீர வேண்டும் என வேண்டுகிறீர்களோ அதை மனதாரக் கூறி விட்டு ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள நாணயத்தின் மீதும் பூக்களை வைக்க வேண்டும். அப்படி பூக்களைப் வைக்கும்போது அதில் போடப்பட்டு உள்ள எழுத்துக்கள் அழிந்து விடாமல் இருக்குமாறு கட்டத்தில் வைத்துள்ள நாணயத்தின் மீதே பூக்களை வைக்க வேண்டும். முழு பூவை வைக்க வேண்டியதில்லை. இடம் இருக்காது என்பதினால் இதழ்களை மட்டும் வைக்கலாம். ஆகவே அந்த கட்டங்களை அதற்கு தக்கவாறு போட வேண்டும். கீழ் உள்ள மாதிரிப் படத்தைப் பார்க்கவும்.






பூ கிடைக்கவில்லை என்றால் அதை விட சிறந்தது குங்குமத்தை நாணயத்தின் மீது தூவலாம். அதை குங்கும அர்ச்சனையைப் போல செய்யலாம்.




ஒன்பது முறையும் வேண்டிக்கொண்டு ஒவ்வொரு முறையிலும் அந்த கட்டத்திலும் உள்ள நாணயத்தின் மீது பூவை வைத்து அல்லது குங்குமத்தை தூவி ஆராதிக்க வேண்டும். முடிவில் கற்பூரத்தை ஒரு தட்டில் ஏற்றி குபேர யந்திரத்தை சுற்றி மூன்று முறை கற்பூர ஆரத்தி காட்டிய பின் அந்த கோலத்தை வணங்கிவிட்டு பூஜையை முடித்து விடலாம். கற்பூர ஆரத்தியை யந்திரத்தின் நான்கு முனைகளையும் தொடுமாறு சுற்றிக் காட்டுவதின் தாத்பர்யம் என்ன என்றால் அந்த தீயானது வீட்டின் அனைத்து மூலைகளிலும் உள்ள எதிர்மறை விளைவுகளின் ஆதிக்கத்தை பொசுக்கி, வீட்டிற்குள் நுழையும் லக்ஷ்மி தேவியும் பகவான் குபேரரும் மகிழ்ச்சியோடு அங்கு இருக்க வகை செய்வதாகவும் கூறுகிறார்கள்.

ஆக இந்த பூஜையில் நாம் ஓதுவது மந்திரம் அல்ல, அது நம்முடைய பக்தி பூர்வமான கோரிக்கை மற்றும் பிரார்தனையைத்தான். வேறு சுலோகம் தெரியும் என்றால் கற்பூரம் காட்டும் முன்னால் அதை கூறிவிட்டு கற்பூரம் காட்டலாம். ஆனால் இந்த

பூஜைக்கு வேறு சுலோகம் கூற வேண்டும் என்பது அவசியம் இல்லை. ஆனால் பூஜைக்கு தேவை இந்த பூஜையின் மீது முழுமையான நம்பிக்கை மட்டுமே.




பூஜை முடிந்தப் பின் கோலத்தை உடனே அழித்து விடக்கூடாது. மறுநாள்வரை அந்த கோலம் நாணயத்துடன் அப்படியே இருக்க வேண்டும்.

மறுநாள்தான் கோலத்தை ஒரு துணியினால் துடைத்து எடுக்க வேண்டும். கோலத்தை துடைக்கும் முன்னால் அந்த ஒன்பது நாணயங்களையும் எடுத்து தனியாக வைத்து விட வேண்டும். சில்லறை வேண்டும் என்பதற்காக அதை மாற்றி வைத்துக் கொள்ளக் கூடாது.

மறுநாள் காலை எழுந்து குளித்ததும் அந்த யந்திரத்தில் உள்ள நாணயங்களை பத்திரமாக எடுத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டில் உள்ள பணத்துடன் சேர்த்து வைத்துக் கொள்ளாதீர்கள். அதை எந்த காரணத்தைக் கொண்டும் வேறு வகைக்கு செலவு செய்யக் கூடாது. அது லக்ஷ்மி தேவி மற்றும் பகவான் குபேரருடைய செல்வம் ஆகும்.

யந்திரத்தின் மீது நேரடியாக விளக்குமாற்றால் பெருக்கக் கூடாது. துணியினால் அதை அழித்தப் பின்னரே அந்த இடத்தைப் பெருக்கலாம். கோலத்தை துடைக்கும் முன்னால் அந்த ஒன்பது நாணயங்களையும் எடுத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்பது நாட்களும் உபயோகிக்கும் எண்பத்தி ஒரு நாணயங்களையும் ஒன்றாக சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.

அதன் பின் அன்று மாலைக்குள் ஒன்பது சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு, பழம் தர வேண்டும். வீட்டிற்கு வரும் வகையில் சுமங்கலிகள் கிடைக்கவில்லை எனில் ஆலயத்தில் சென்று அங்குள்ள ஏதாவது ஒன்பது சுமங்கலிப் பெண்மணிகளுக்கோ அல்லது திருமணம் ஆகாத கன்னிப் பெண்ணுக்கும் கூட வெற்றிலைப் பாக்கு, பழம் தரலாம். அவர்களும் கிடைக்கவில்லை என்றால் லஷ்மியின் சன்னதியில் தாம்பூலங்களை அப்படியே வைத்து விட்டு வரலாம். இதன் தாத்பர்யம் என்ன என்றால் இப்படியாக ஒன்பது பெண்களுக்கும் பெற்றுக் கொள்ளும் தாம்பூலத்தை

லக்ஷ்மி தேவியே அவர்கள் உருவில் வந்து ஒன்பது கட்டங்களிலும் செய்யப்பட்ட பூஜையை அங்கீகரித்து பெற்றுக் கொண்டதான நிலை என்பதான அர்த்தம்.

ஒன்பது கட்டங்களின் தாத்பர்யம் என்ன என்றால், அவை அனைத்தும் உங்கள் வீட்டின் அனைத்து திசைகளையும் (எட்டு திசைகள்) நடுப்பகுதியையும் குறிப்பதாகும். நடுப் பகுதியே லக்ஷ்மி மற்றும் குபேரரை பூஜிக்கும் நீங்கள் என்பதாகும். இப்படியாக எட்டு திசைகளில் இருந்தும் செல்வத்தை வாரி வழங்கியபடி லக்ஷ்மி தேவியும், பகவான் குபேரரும் உங்கள் வீட்டில் வந்து உங்களுடன் வசிக்கத் துவங்கும் நிலையை குறிப்பதாகும்.

பூஜை முடிந்த ஒன்பதாம் நாளன்று கண்டிப்பாக பூஜை செய்தவர் ஏதாவது ஒரு லஷ்மியின் ஆலயத்துக்குச் சென்று தம்முடைய அதே பிரச்சனையைக் கூறி அவளை அதை களையுமாறு வேண்டிக் கொண்டு வர வேண்டும். தனி லஷ்மி ஆலயம் இல்லை என்றாலும் கவலை இல்லை. வேறு எந்த ஆலயத்துக்காவது சென்று லஷ்மியின் சன்னதிக்கு சென்று வேண்டுதலை வைத்தப் பின் ஒன்பது நாட்களும் பூஜை செய்து வைத்த எண்பத்தி ஒரு நாணயங்களையும் லஷ்மி தேவியின் உண்டியலில் போட வேண்டும் அல்லது அதை அப்படியே சன்னதியின் தட்டில் போட்டுவிட்டு வர வேண்டும். அதைப் போடும் முன்னால் தான் அவளுக்கு செலுத்தும் அந்த காணிக்கையைப் போல தனக்கும் பல மடங்கு செல்வம் தர வேண்டும் என லஷ்மி தேவியை மனமார வேண்டிக்கொள்ள வேண்டும்.

இந்த பூஜையை குறிப்பிட்ட காரணத்துக்காக மட்டுமே செய்ய வேண்டும் என்பதல்ல. வசதி உள்ளவர்கள் தொடர்ந்து குறிப்பிட்ட தினத்தில் பக்தியுடன் செய்து வந்தால் வீட்டில் அமைதி நிலவும். பணப் பிரச்சனை இருக்காது. செல்வம் நிலைக்கும். அப்படி பொதுவாக செய்யும் பூஜையின்போது நாம் கூற வேண்டிய த்யான சுலோகம் ‘அம்மா, மகாலஷ்மித் தாயே, நீ எங்களுடைய வீட்டில் நிரந்தரமாகத் தங்கி எங்களைக் காத்தருள வேண்டும்’ என்பதே.

**Read this in the following link : https://santhipriya.com/2016/07/குபேர-பூஜை.html**

# Very simple Gubera Poojai

-Santhipriya-




The one you see above is called Guber Yanthra, the Yanthra that invokes the grace of God of wealth Lord Guber. This Yanthra was given to Lord Guber by Goddess Lakshmi when Lord Guber lost his wealth on account of a curse. The pundits say that if one perform Pooja to this Yanthra they will gain wealth. This Pooja need not be performed only to gain wealth temporarily to meet the crisis requirement, but if the Pooja is

regularly done twice or thrice in a year, there would be no crunch of fund at home, peace will prevail, and there would be all round happiness at home so say the Pundit.

Is there simpler form of Pooja available to perform and to invoke the blessings of Lord Guber? One of the simplest forms of performing Lord Guber Pooja was narrated to me by a pundit and I take pleasure in sharing the same for the benefit of everyone. An important aspect of this Pooja is that one need not chant only Sanskrit mantras while performing the Pooja. Only dedication, sincerity and unflinching faith is suffice to perform the simplest Pooja for Lord Guber.

The main item required for performing this Pooja is Coins of same size and value. One need not bother about the minimum or maximum value of coins needed. It could be even 50 paise coins provided it is in circulation as legally issued by the state. One should not use duplicate coins i.e replica of original coins sold in the market commercially. This is most important.




The second most important aspect to be kept in mind is to decide the day from when one should commence the Pooja. It is nine days Pooja and should commence beginning from either Friday or the day of full moon. Once the day is decided then the nine days of Pooja should be performed only on those specific days in continuation for nine weeks, i.e if the Pooja had been commenced on Friday, then the Pooja shall be performed every Friday in continuation totalling to nine Fridays. Similarly if it had been started on Full moon day, then the Pooja shall be continued in the next nine Full moon days and not on any other day.

Once the day is decided, take bath in the morning and then draw floral designs (Rangoli) with rice powder in front of the deity (if separate Pooja room is available) as drawn traditionally during festive seasons and then draw the following Guber Yanthra in the place where you decide to sit and perform the Pooja.




The model Yanthra as shown above should be drawn with pure rice powder white in colour, Red Vermilion powder used by ladies to put mark in their forehead and then the yellow turmeric powder. The outer border should be drawn with Vermilion powder and the numerals with rice powder (White). The words 'Sree' should be with turmeric powder (Yellow).

Once someone commenced the Pooja, for some unavoidable reason, they could not continue the Pooja on some of the days due to any reason, they need not feel worried. The Pooja could be performed in continuation by someone in the same family staying in the same house, to ensure that the link of the nine days Pooja is not broken.

Be sure that if you had used a particular valued coin, for the entire period of nine days the same valued coins need to be used. For example if you had chosen to perform the Pooja with one rupee coin on the first day, then on all the nine days it should be only one rupee coin and not mixture of coins like one day one rupee coin, the other day two rupee coin and some other day eight annas coin and so on. Therefore once you have made up your mind to perform the nine day Pooja ritual, first collect 9 x 9 = 81 coins of the same type and same value for the Pooja.

As said earlier, the Pooja has to be performed for continuous nine specific days beginning from any one of the days you have commenced. For example you have commenced it on Friday, next eight Fridays the Pooja shall have to be performed. Similarly if you have commenced it on Full moon day, continue performing the nine days Pooja on every full moon day stretched to nine full moon days. While performing the Pooja keep the coins inside each of the boxes in such a manner that the letters are not erased during Pooja. See below the model illustration.




How do you perform Pooja? Very simple. After you drew the Yanthra in the manner shown, keep the coins as shown above and then light up an oil lamp in front of the Yanthra. Begin chanting one of the following prayers for which you specifically intended to perform the Pooja.

- Oh, mother Mahalakshmi, I salute thee in the form of this coin, give me enough wealth to wipe off my debts and derive mental peace and happiness. or
- Oh Mahalakshmi, I salute thee in the form of this coin, grace me to recover my losses in business or loans given and give me mental peace and happiness. or
- Oh Mahalakshmi I salute thee in the form of this coin, grace me to retain the wealth which gets drained off unnecessarily and give me mental peace and happiness. or
- Oh Mahalakshmi I salute thee in the form of this coin, grace me with enough wealth to impart education to my children and give me mental peace and happiness. or
- Oh Mahalakshmi I salute thee in the form of this coin, grace me with enough wealth to run my family and give me mental peace and happiness.

At the end of the chanting, also pray to the Goddess Mahalakshmi and Lord Guber to stay with you forever and grant prosperity.







Every time after you chant above prayer, keep a small size flower over the coin without erasing the no. The boxes are to be thus drawn in such a manner that enough space is available to keep nine flowers on the coin... It could also be the betel of flowers without stem.



If you cannot procure flowers, then sprinkle Vermilion powder called Kunkum (used to apply on forehead by married ladies) which will be far better than flowers. See below the model illustration to understand this aspect.

Once you have completed chanting the prayer for nine times and offered flowers or sprinkled vermilion powder over the coin, light up camphor in a lamp holder and show it before the Guber Yanthra circling the Yanthra with the lighted camphor three times to ensure that the entire areas of the Yanthra are covered by the camphor lamp. This act symbolizes the act of burning the negative energies with the power of the Yanthra so that Goddess Lakshmi and Lord Guber who enters your home through the Yanthra would feel comfortable to stay there.




What we chant in this Pooja is our simple and sincere prayer from our heart without invoking them with mantra. If someone know Lakshmi slokas, they can also be recited, but not mandatory. What one need in perfect faith in this prayer and sincerity without shadowing any pinch of doubt in mind.

Once the Pooja is completed, do not rub away the Yanthra or remove the coins and flowers on them immediately the same day. It should be retained for the entire day and only in the next day the place could be cleaned.

Next day morning also after you take bath, remove the coins safely, wipe it out the coins clean and retain them separately in a box or wallet. Do not spend those coins or allow them to get mixed up with other money/coins at home. They belong to Goddess Lakshmi and Lord Guber.

The Yanthra drawn should be cleaned by wiping with a cloth and not to be wiped out with a broom. Collect the coins after performing Pooja on all the nine days and keep them together safe. However you can mix up those eighty one coins with which the Pooja was performed and keep them in a bag or wallet separately.

Every time after completing the day's Pooja offer turmeric, betel leaves and betel nut with a fruit to nine married women (not a virgin girl). This is called offering tambula or tambulam (in Sanskrit tambula and in Tamil tambulam). If you are unable to offer it to nine women by inviting them home, offer the same to any married women or virgin girls in any of the temples. There too if you are unable to find nine married women, keep them in the sanctum before the Goddess and come back. This should be done any time before the end of the day on the day the pooja was performed. The crux is that the act symbolizes the reverence shown to Goddess Mahalakshmi who reportedly appear in the form of those ladies to symbolically show out that she has accepted your prayer from each of the nine boxes you have drawn in the Yanthra.

The tenet of the Pooja for the Yanthra with nine boxes is that they represent the nine points of your home i.e. eight directions and the centre of the house which is you. Thus at the end of the nine days Pooja, pleased with your prayer both Goddess Mahalakshmi and Lord Guber enter into your home showering wealth from all directions and settle in you to give you prosperity.

At the end of the nineth day's Pooja one who had performed the Pooja should go to any one of the temples to offer their prayer and worship to Goddess Mahalakshmi in her sanctum. In case the temple exclusive to her is not found, you can go to any of the temples where Goddess Mahalakshmi is seated in some sanctum and she can be worshipped there. After worshiping the Goddess on the nineth day, the entire eighty one coins are to be deposited in her hundi or sanctum as they belong to her which will beget several time more wealth like the offering you have made in fulfilment of their prayer.

The pundits say that it is not necessary to perform the Pooja only to derive temporary benefit, but by performing this Pooja on regular basis. If this exercise is continued regularly say twice or thrice a year in the family, it would show a miraculous effect by way of ending unwanted expenditures, remove tensions from the minds of family members and to give sense of natural happiness. When someone regularly perform this Pooja as a habit- thrice or even frequently, then the general prayer could be 'Mother Mahalakshmi, please continue to stay with us forever and grace us'.

**Read it further in the link: https://santhipriya.com/2016/07/kuber-pooja-e.html**